**தலைப்பு 302 – கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) ஆணைக்குழுவால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 07 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், குறித்த ஏற்பாடுகளினைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் உரிய செலவின விடயங்களுடன் தொடர்புடைய ஏற்பாடுகளின் 11 சதவீதம் மற்றும் 45 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இல் காணப்படும் ஏற்பாடுகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவன் மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | பொருளாதாரம் சார்ந்த முறையொன்றில் இந்த செலவின விடயங்களின் கீழ் செலவினங்கள் ஏற்பட்டமை காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 வருமான சேகரிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆணைக்குழு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரொருவராக செயற்படாத போதிலும், ரூபா 157,538 வருமானத்தைச் சேகரித்திருந்ததுடன், 2018 நவம்பர் 21 இன் 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏனைய வருமானமாக கணக்கிற்குக் | 2018 நவம்பர் 21 இன் 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த கணக்கீட்டில் ஏற்பட்ட பிழையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 48 மேன்முறையீடுகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் திட்டமிடப்பட்ட எண்ணிக்கையில் 19 மேன்முறையீடுகள் அல்லது 39 சதவீதம் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்பார்க்கப்பட்டவாறு ஊழியர் முறைப்பாடுகளினை பெறத்தவறியமை அத்துடன் ஊழியர் சர்ச்சைகளின் சிக்கல் தன்மையின் விளைவொன்றாக மற்றும் ஊழியர் சர்ச்சைகளினை புலனாய்வதில் தாமதம் போன்ற விடயங்கள் காரணமாக அனைத்து முறைப்பாடுகளினையும் புலனாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும், 2018 ஆம் ஆண்டின் ஆணைக்குழுவின் குழு உறுப்பினர்களின் அலுவலகக் காலம் 2018 பெப்ரவரியில் காலாவதியாகின்றதுடன் ஆணைக்குழுவின் குழு உறுப்பினர்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 2018 யூலையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த விடயங்கள் காரணமாக பெறப்பட்ட முறையீடுகளின் புலனாய்வு சதவீதம் குறைவடைந்திருந்தது. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட 57 மேன்முறையீடுகளில், மீளாய்வாண்டில் 07 மேன்முறையீடுகள் மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டுகளில் பெறப்பட்ட 50 மேன்முறையீடுகள் மேலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எடியுகேசன் எம்புளாஈஸ் கோப்பரேடிவ் திரிப்ட் என்ட் கிரடிட் சொசைடி லிமிட்டட்டின் ஊழியர்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளினை தாக்கல் செய்திருந்தனர். குறித்த சமூகம் மற்றும் ஊழியர்களினால் சட்டரீதியான உதவியை நாடியமை காரணமாக ஆணைக்குழுவினால் பெறப்பட்ட முறைப்பாடுகளினை புலனாய்வு செய்ய முடியாதிருந்தது. |
| (இ) ஆட்சேர்ப்பு மற்றும் கூட்டுறவு சமூக ஊழியர்களின் பதவியுயர்வு மற்றும் அமைய ஊழியர்களின் சேவையை நீடிப்புச் செய்தல் போன்ற முக்கிய தொழிற்பாடுகள் ஆணைக்குழுவால் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த தொழிற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | முக்கிய தொழிற்பாடுகளினை செயற்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்பு மற்றும் புதிய உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு மற்றும் சேவைக்காலப்பகுதியை நீடிப்புச்செய்தல் போன்ற விடயங்கள் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் காணப்பட்டது. அவற்றை எதிர்வுகூறத் தவறியமை காரணமாக அந்த விடயங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஒவ்வொரு சமூகத்திற்கும் இணைக்கப்பட்டுள்ள அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல் ஆணைக்குழுவிடம் காணப்படவில்லை. | ஆணைக்குழுவினால் கூட்டுறவு சமூகங்களின் பதவியணியினர் தொடர்பான தீர்மானங்களினை எடுக்கும் போது, நாளதுவரையாக்கப்பட்ட முறைமையொன்றில் பதவியணியின் தொடர்பான தேவைப்படும் தகவல் காணப்படல்வேண்டும். | கூட்டுறவு சமூகங்களின் பதவியணியினர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அவற்றை நாளதுவரையாக்கப்பட்ட முறைமையொன்றில் பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென தயவுடன் அறியத்தருகின்றேன். |